# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109434

1. District : ஈரோடு மாவட்டம் | PS: V & AC காவல்நிலையம் | Year: 2023 ஆண்டு | FIR No.: 7/AC/23 மு.த.அ. எண் | Date: 15.09.2023 நாள் 0700

2. (i) Act சட்டம்: The P.C. Act 1988 as Amended | Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: by the PC (Amendment) | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Act - 2018 | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 07.09.2023 | Date to : நாள் வரை 14.09.2023
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 16.30 hrs | Time to : நேரம் வரை 13.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.09.2023 | Time : நேரம் 19.15 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VO1-III 14.09.2023 | Time : நேரம் 19.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக (கணினியில் தமிழில் தட்டச்சு - செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 3கி.மீ தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி அரசு தலைமை மருத்துவமனை காவல்நிலையம், - ஈரோடு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. பிரகாஷ் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கே.ராமகிருஷ்ணன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 42 வருடம் | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி 31/1, டீச்சர்ஸ் காலனி, ஆலாம்பாளையம் - அஞ்சல், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. செல்வக்குமார், உதவி ஆய்வாளர், அரசு தலைமை மருத்துவமனை காவல்நிலையம், ஈரோடு.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

15/09/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
R. Pravin

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15.09.2023
09.00 hrs

Name: பெயர் எ. ஆறுமுகம்,
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ……….
சொ.த.க. பிரிவு,
T.T. ரோடு

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3 16(HCL-12)p.2

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 7/AC/2023 u/s 7(a) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் G ஆறுமுகம் ஆகிய நான் 14.09.2023 தேதி மாலை 19.15 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது திரு.ஆர்.பிரகாஷ், (வயது-42), த/பெ கே.ராமகிருஷ்ணன், 31/1 டீச்சர்ஸ் காலனி, ஆலாம்பாளையம் அஞ்சல், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கணிணியல் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து பூர்வமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புனர் திரு. ஆர்.பிரகாஷ், (வயது-42), த/பெ கே.ராமகிருஷ்ணன், 31/1 டீச்சர்ஸ் காலனி, ஆலாம்பாளையம் அஞ்சல், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம் பெறுநர் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, ஈரோடு மாவட்டம், ஈரோடு. ஐயா, நான் நாமக்கல் மாவட்டம், ஆலாம்பாளையம், டீச்சர்ஸ் காலனியில் குடியிருந்து வருகிறேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். நான் பஜாஜ் பல்சர் பைக் வைத்துள்ளேன். கடந்த 07.09.2023-ம் தேதி வியாழக்கிழமை அன்று நான் எனது பைக்கில் ஈரோட்டிற்கு வந்தேன். ஈரோடு அரசு மருத்துவமனை ரவுண்டானா அருகில் மேட்டூர் ரோட்டில் திரும்ப சென்று கொண்டிருந்த போது சுமார் 11.30 மணியளவில் சுமார் 70 வயது மதிக்கதக்க பெண் ஒருவர் எனது பைக்கை கவனிக்காமல் வந்ததால் விபத்து ஏற்பட்டது. அவருக்கு இடது முழங்காலுக்கு கீழ் அடிபட்டது. உடனே நான் 108 ஆம்புலன்ஸக்கு சொல்லி ஈரோடு அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். எனது பைக்கிற்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை. எனது பைக்கில் அடிபட்ட பெண்ணுக்கு உதவியாக அவரது மகள் உஷாராணி GH க்கு வந்தார். இது சம்பந்தமாக எனது பைக் பதிவு எண் (TN34K0500) எனது மொபைல் போன் (94882 19999) ஆகியவற்றை அடிபட்ட நபரின் மகளிடம் தெரிவித்து விட்டு, அவரிடம் நான் வீட்டுக்கு செல்வதாகவும், ஏதாவது தகவல் இருந்தால் தெரிவிக்கும்படி கூறிவிட்டு சென்றுவிட்டேன்.

அன்று (07.09.2023) மாலையில் ஈரோடு அரசு மருத்துவமனை காவல் நிலையத்திலிருந்து ஒரு போலீஸ்காரர் என்னை செல்போனில் அழைத்து என்னிடம் விசாரித்து உடனே காவல் நிலையத்திற்கு எனது பைக்கை எடுத்து வருமாறு சொன்னார். நான் மாலை சுமார் 4.30 மணியளவில் எனது பைக்கில் ஈரோடு அரசு மருத்துவமனை காவல் நிலையத்திற்கு வந்து எஸ்ஐ அவர்களை பார்த்தேன். அப்போது அவரது பெயர் திரு.செல்வகுமார் என்று தெரிந்து கொண்டேன். அவர் என்னிடம் விபத்தை ஏற்படுத்திவிட்டு சொல்லாமல் போய்விட்டாயா என்று கேட்டுவிட்டு எனது பைக்கை விட்டுவிட்டு போகுபடியும், என்மீது கேஸ் போடுவதாகவும், மறுநாள் காலையில் இரண்டு ஜாமீன் தாரர்களை அழைத்துக்கொண்டு பணம் ரூ.10,000/- உடன் கொண்டு வரும்படியும் சொன்னார். ஆனால் நான் அவர் சொன்னபடி மறுநாள் செல்லவில்லை. அதனால் அடுத்த நாள் 08.09.2023 தேதி எஸ்.ஐ திரு.செல்வகுமார் அவர்கள் அவரது செல் போன் எண். 8610272462-லிருந்து எனது செல்போன் எண். 9488219999 க்கு

போன் செய்து உடனே காவல் நிலையத்திற்கு வரும்படி சொன்னார். நான் பணம் ரெடியாகவில்லை என்றும் இரண்டு மூன்று நாட்களில் வருவதாக சொன்னேன்.

அதன் பின்னர் நான் 12.09.2023-ம் தேதி காலை 11.00 மணியளவில் ஈரோடு அரசு மருத்துவமனை காவல் நிலையத்திற்கு சென்று எஸ்ஐ திரு.செல்வகுமார் அவர்களை பார்த்தேன். அப்போது அவர் என்மீது ஆக்ஸிடெண்ட் கேஸ் போட்டுள்ளதாகவும், தான் கேட்ட பணம் ரூ.10,000/-ஐ கொண்டுவந்தாயா என்றும் ஜாமீன் தாரர்கள் எங்கே என்று கேட்டார். நான் ஜாமீன் தாரர்கள் பின்னால் வருவதாகவும் நீங்கள் கேட்ட தொகை அதிகமாக உள்ளது கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். பிறகு அவர் ரூ.3000/- குறைத்துக் கொள்ளவதாகவும், ரூ.7000/- கொடுக்கும்படி சொன்னார். அப்போது அவர் என்னிடம் என்மீது GH PS Cr.No.43/2023 ன்படி வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், என்னை கைது செய்துள்ளதாக சொன்னார். பின்னர் அவர் தான் கேட்ட பணத்தை கொடுத்தால் தான் எனது பைக்கை திருப்பி தருவேன் என்றும் சொன்னார். நான் பணம் கொண்டுவரவில்லை என்று சொன்னதற்கு இப்போது ஜாமினில் போகும்படியும், வண்டியை MVI இன்ஸ்பெக்சனுக்கு காட்டும்போது தான் கேட்ட பணத்தை கொடுத்துவிடவேண்டும் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். நான் ஜாமினில் சென்றுவிட்டேன்.

நேற்று 13.09.2023 ஆம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு எஸ்.ஐ திரு.செல்வகுமார் அவர்கள் அவரது செல்போனிலிருந்து எனது செல்போனுக்கு போன் செய்து நாளை (14.09.2023) என்னிடம் என்னுடைய பல்சர் வண்டியின் ஆவணங்களை கொண்டுவருமாறு சொன்னார். அதன்படி இன்று 14.09.2023-ம் தேதி காலை 11.00 மணியளவில் காவல் நிலையத்திற்கு சென்று பார்த்தபோது எஸ்ஐ அங்கு இல்லை. பின்னர் மதியம் சுமார் 1.00 மணியளவில் எஸ்ஐ திரு.செல்வகுமார் காவல் நிலையத்துக்கு வந்தார், அவர் என்னை பார்த்தவுடன் என்னிடம் தான் கேட்ட பணத்தை கொண்டு வந்தாயா என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் ரெடியாகவில்லை என்றும் தற்போது ரூ.2000/-ம் தான் உள்ளது என்று சொல்லி பணம் ரூ.2000/- ஐ எடுத்தபோது அதை வாங்கி எண்ணிப்பார்த்துவிட்டு இது வேலைக்கு ஆகாது, உங்களுக்கு வண்டி வேண்டுமா, வேண்டாம என்று கேட்டார். நான் எனது வண்டியை கொடுக்கும்படி கேட்டேன். அப்படி என்றால் தான் கேட்ட மீதி தொகை ரூ.5000/-ஐ கொடுத்தால் தான் வண்டியை MVI இன்ஸ்பெக்சனுக்கு காட்டிவிட்டு பைக்கை திருப்பி தரமுடியம் என்று கண்டிப்பாக சொன்னார். பிறகு ஒரு போலீஸ்காரரை அழைத்து எனது பைக்கை MVI இன்ஸ்பெக்சனுக்கு காட்டிவிட்டு பைக்கை திரும்ப காவல் நிலையத்திற்கே கொண்டுவரும்படி சொன்னார். நானும் போலீஸ்காரரும் ஈரோடு கிழக்கு RTO ஆபிசுக்கு சென்றோம். போலீஸ்காரர் எனது பைக்கை ஓட்டி வந்தார். அங்கு எனது பைக்கை MVI-யிடம் இன்ஸ்பெக்சனுக்கு காட்டினோம். அங்கு என்னிடம் வாகனம் சம்மந்தமான ஆவணங்கள் இல்லை என எனக்கு ரூ.3000/- பைன் போட்டார்கள். அதனை நான் ஆன்லைனில் செலுத்தி ரசீது பெற்றுக் கொண்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலீஸ்காரர் எனது பைக்கை எடுத்து சென்று விட்டார். பிறகு நான் யோசித்து

பார்த்ததில், எனது பைக்கை எனக்கு திரும்ப கொடுப்பதற்கு ஈரோடு அரசு மருத்துவமனை காவல் நிலைய எஸ்ஐ திரு.செல்வகுமார் அவர்களுக்கு மேலும் லஞ்சமாக ரூ.5000/-ஐ கொடுக்க விருப்பமில்லை. எனவே ஈரோடு அரசு மருத்துவமனை காவல் நிலைய எஸ்ஐ திரு.செல்வகுமார் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுகொள்கிறேன். இப்படிக்கு, XXXX (R.பிரகாஷ்) ஈரோடு 14.09.2023.

Sir, Received the above said computer tamil typed complaint on 14.09.2023 at 19.15hrs. Sd/- (xxxxxxxx) 14.09.2023 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Sir, A confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, Chennai I am registering a case in Erode, Vigilance and Anti-Corruption Cr.No.07/AC/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 against the accused Tr.M.Selvakumar today on 15.09.2023 at 07.00 hrs Sd/- (xxxxxxxx) 15.09.2023 G.Arumugam, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.R.Prakash age 42, s/o K.Ramakrishnan, 31/1 Teachers Colony, Alampalayam post, Kumarapalayam taluk, Namakkal District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

15/09/2023

(G.Arumugam)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.